## கருத்தமைதி – ஜுலை 2020

## பிரான்சிஸ்கன் ஆரத்தழுவுதல் என்னும் அன்புப் பரிமாற்றம்

நற்கருணையில் உடனிருந்து செயல்படும் இயேசுவைச் சந்திக்க, ஆராதிக்க, வாழ்த்திப் போற்றித் துதிக்க உகந்த நேரம் இது. இயேசுவின் விலைமதிப்பில்லா அன்பிற்கு பிரதி அன்பு காட்டும் நேரம் இந்த நேரம். உலகில் நற்கருணை நாதருடன் செலவிடும் நேரமே, நாம் செலவிடும் மிகச் சிறந்த நேரமாகும். ''நற்கருணைப் பேழையில் நமக்காகக் காத்திருக்கும் இயேசு, நம் வரவைப் பேராவலுடன் எதிர்பார்க்கும் சிறைக் கைதியைப்போல ஏங்குகிறார்'' என்கிறார் **புனித திருத்தந்தை இரண்டாம் ஜான்பால்**. இன்று நற்கருணை ஆராதனை உலகிற்கும், திருச்சபைக்கும் மிக அவசியம் என்றும் அவர் கூறியிருக்கிறார். இயேசுவைத் தன் வாழ்நாள் முழுவதும் தழுவிக்கொண்ட பிரான்சிஸைப் போல நாமும் தழுவிக்கொள்ள நமக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இயேசுவை நேசித்தவர்கள் நற்கருணை நாதரை அதிகமாக நேசித்தார்கள். நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் நேரத்தை நன்றியோடு பெற்றுக் கொண்டு அவரை விட்டுப் பிரியாமல் எப்போதும் அவரைத் தழுவிக்கொள்ள ஆசையாய் இயேசுவை வரவேற்போம்.

**பாடல் : இயேசுவே என் உள்ளம் வாருமே** ....

**ஆராதனைப்பாடல்: உயர்ந்தவரும் உன்னதரும்** ....

உயிரினங்களில் சில கூடி வாழும். அவை உறவு, நட்பு, தோழமையோடு கூடிவாழ்கின்றனவா? என்றால் அவற்றை உணரும் உள்ளம் அவற்றிற்கு இல்லை. அவை கூடி வாழ்வதுகூட நாம் கூடி வாழ வேண்டும் என்ற உணர்வினால் அல்ல. பாதுகாப்புக் கருதி கூடி வாழும் என்பது இயற்கை கொடுத்தது. அவை தானே உருவாக்கிக் கொண்டது அல்ல. ஆனால் மனிதன் அவ்வாறு படைக்கப்படவில்லை. தானே தேடிச் சென்று நட்பு கொள்வான். உறவு கொள்வான். தோழமை கொள்வான். மனிதனுக்கு உயிருள்ளவைகளோடு மட்டுமல்ல. உயிரல்லாதவற்றோடும் உறவு உண்டு. மனிதன், இறைவனுக்கும் மற்ற உயிரினங்களுக்கும் நடுவில் இருக்கிறான். அப்படிப்பட்ட மனிதன் அனைத்தையும் தழுவி வாழ வேண்டும் என்பதே இயற்கையின் நியதி.

பிறப்பின் நோக்கம் புரிந்த பிரான்சிஸ் அதை நோக்கிப் பயணிக்க அதிக விலை கொடுக்க வேண்டியிருந்தது. நான் என்னும் அகந்தையை உடைத்த முதல் மனிதர் இவர். பகட்டான வாழ்க்கையைத் துச்சமெனத் தூக்கி எறிந்தார். அவமானங்களைத் தாங்கிக் கொண்டார். துன்பத்தின் எல்லை எதுவாயினும் மகிழ்வோடு ஏற்றுக் கொண்டார். மானிடரில் நலிந்தோரை, வெறுத்து ஒதுக்கப்பட்டோரை தன் சொந்த உறவுகளாய் அணைத்துக் கொண்டார். படைப்புகள் அனைத்தையும் சகோதர சகோதரிகளாகக் கண்டார். தந்தை பிரான்சிஸ் என்று தன்னை மறுத்தாரோ அன்றே அவருடைய உலகம் மிகப் பெரியதாய் மாறியது. தந்தை பிரான்சிஸைப் போல இறைத் திருமுன் நமது ஒன்றுமில்லாமையை உணர்ந்து அவரைத் தழுவிக் கொள்ள அருள்வேண்டி இப்பஜனையில் இணைவோம்.

**பஜன் : உம்மைப் பற்றிக் கொள்ள வேண்டும் இயேசுவே ….**

***<u>லூக் 6 : 27-36</u>***

**மறுகன்னத்தைக் காட்டு மேலுடையையும் கொடு**

**இருகல்தொலை செல் கேட்கிறவருக்குக் கொடு**

மேலே கூறப்பட்டுள்ள நான்கு செயல்பாடுகளும் எல்லா மதங்களிலும் உண்டு. ஆனால் நற்செய்தியின் இறுதியில் இயேசு இரண்டு மாற்றுக் கலாச்சாரத்தைத் தருகின்றார்.

1. பகைவருக்கும் அன்பு 2. துன்புறுவோருக்காக செபம். இங்குதான் இயேசு உலகமக்கள் அனைவரிடமிருந்தும் வேறுபட்டு நிற்கின்றார். பகைவருக்கு நாம் அளிக்கும் உச்சக்கட்ட தண்டனை **மன்னிப்பு**. இது நமக்கு எதிராக தவறு செய்தவரை மன்னிப்பது மட்டுமல்லாமல், அவருக்கு நன்மை செய்யவும் அழைப்பு விடுக்கின்றது. இப்படிப்பட்ட செயல் நிச்சயமாக உலகத்தின் பார்வையில் ஒரு கேலிக்கூத்தாகத்தான் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. பழிவாங்குபவன் பலசாலி, மன்னிப்பவன் மதியீனன் என்ற உலகத் தத்துவத்திற்கு ஏற்ப வாழாமல் பிறரை மன்னித்து அவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற இயேசுவின் அழைப்பு நிச்சயம் சவாலானதுதான். அன்பிற்கு எல்லையில்லை. வேலியுமில்லை. மதிற்சுவர்களுமில்லை. நாம் எல்லோருமே கடவுளின் பிள்ளைகள். இறைவனின் சாயலில் படைக்கப்பட்டவர்கள். அவரின் சாயலை சுமந்திருக்கிறோம். அவரின் சாயலை சுமந்திருக்கிற சக மனிதனை அன்பு செய்ய, அரவணைக்க தடைகளாக தென்படுபவை யாவை? சற்று சிந்திப்போம். தொழுநோயாளிகள், பாவிகள், புறவினத்தார்கள், சமாரியர்கள், பெண்கள், இவர்களெல்லாம் இயேசு வாழ்ந்த காலத்தில் துச்சமாய்க் கருதப்பட்டவர்கள். முகவரி இழந்தவர்கள். மனித மாண்பின்றி நடத்தப்பட்டவர்கள்.

**இயேசு இவர்களை எவ்வாறு அணுகினார் என்பதை நற்செய்தியின் ஒளியில் சீர்தூக்கி தியானிப்போம்:**

தொழுநோயாளிகளைத் தொட்டு குணப்படுத்தினார்.**(மத் 8:3)** ஊனமுற்றவரை நடக்கச் செய்தார்.**(மத் 9:6-7)** பார்வையற்றவர்களுக்குப் பார்வை அளித்தார். **(மத் 9:29-30)** பாவிகளை மன்னித்தார்.**(லூக்7:48-50)** ஏழை எளியவர், ஒதுக்கபட்டோர், ஓரங்கட்டப்பட்டோர் என சமுதாயத்தால் புறக்கணிக்கட்டோருக்கும் முக்கியத்துவம் கொடுத்தார். இயேசுவின் இந்த அரவணைப்பு பலரின் மறுவாழ்விற்கு வழிவகுத்தது. இயேசுவின் இந்த அணுகுமுறை தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமுறையினராய்த் தங்களை எண்ணிக்கொண்டிருந்தோருக்கும் ஒதுக்கப்பட்ட மக்களுக்கும் இடையே இருந்த பாகுபாட்டைத் தகர்த்தெறிந்தது. இந்தச் சமுதாயத்திற்கு இவர்களால் என்ன பயன்? இவர்கள் பிறந்ததே பாவம் என்று கருதிய சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்களையும், உதாசீனப்படுத்தப்பட்டவர்களையும் இயேசு கருணை யோடு பார்த்து, தொட்டு, அரவணைத்தது புதிய வாழ்வுக்கு வழிவகுத்தது.

இத்தகைய நிலையில் செல்வக்குடியில் பிறந்த பிரான்சிஸ் இயேசுவை அப்படியே பிரதிபலித்து வாழ்ந்தார் என்றால் பிரான்சிஸ்கன் சகோதரிகளாகிய நாமும் பிரான்சிஸைப் போலவே வாழ அழைக்கப்படுகிறோம்.

**பாடல்: தெய்வம் நமது தாயும் தந்தையாம் ….**

காவி உடுத்தி, கற்றைச் சடைமுடி வளர்த்து, கமண்டலமேந்தி, கானகத்தில் அத்துவானத் தனிமையில் கண்மூடித் தவமிருக்கும் துறவை இன்றைய நமது ஆன்மீகம் சொல்லவில்லை. துறவு என்பது எல்லாவற்றையும் நீத்தல் இல்லை.

சுயநலமின்றி அனைத்து உயிர்களையும் அன்புசெய்து ஆரத்தழுவி அவற்றின் நலனுக்காகத் தன்னை முற்றாக அர்ப்பணம் செய்வது ஆகும். இப்படிப்பட்ட அர்ப்பணத்தைத்தான் பிரான்சிஸ் தழுவினார்.

12ம் நூற்றாண்டில் வாழ்ந்த நம் **தந்தை பிரான்சிஸ்** இயேசு வாழ்ந்ததைப் போலவே வாழ முற்பட்டார். ஆரம்ப காலக் கட்டத்தில் பிரான்சிஸ் தொழுநோயாளிகளைத் தொடவோ, முத்தமிடவோ துளியும் எண்ணியதில்லை. அவர்களைக் கண்டாலே அருவருப்பு உள்ளத்தில் ஊற்றெடுத்தது. அருகில் செல்லக்கூடத்தயங்கினார். வாழ்க்கையை மிகச் சந்தோஷமாகக் கொண்டாடிய அவர், நண்பர்களே உலகமென ஆட்டம் பாட்டம், கேளிக்கைகளில் திளைத்திருந்தார். ஆடம்பரம், அதிகாரம், செல்வாக்கு, சிற்றின்பங்களில் மூழ்கியிருந்தார். நண்பர்கள் சூழ எப்பொழுதும் நாட்களை, நேரத்தை விரயமாக்கினார்.

எல்லோருடைய வாழ்க்கையிலும் ஒரு திருப்பம் வரும். அந்த திருப்பம்தான் வாழ்க்கையைப் புரட்டிப் போடும். எல்லோரும் அதற்குப் பதிலுரைப்பார்களா? என்றால் இல்லை. சிலர் பதிலுரைக்கிறார்கள். அவர்கள்தான் சரியான பாதையை நோக்கித் தங்களின் வாழ்க்கையை நகர்த்துவார்கள். இவர்களில் ஒருவர்தான் நம் தந்தை பிரான்சிஸ்.

**வாழ்க்கையில்** ஜெயிப்பது என்பது வேறு.

**வாழ்க்கையை** ஜெயிப்பது என்பது வேறு.

மனிதராய் பிறந்தவர்கள் இதில் ஏதாவது ஒரு முடிவுக்குவர வேண்டும். எந்த முடிவுக்கும் வராதவர்கள் மிகப் பெரிய குழப்பவாதிகளாய் இருப்பார்கள். தந்தை பிரான்சிஸ் வாழ்க்கையில் ஜெயிக்க முடிவெடுத்திருந்தால் தந்தையின் வழியில் சென்று வணிகத்தில் கொடிகட்டிப் பறந்திருப்பார் அல்லது போருக்குச் சென்று திறமையுடன் போரிட்டு வெற்றி மகுடம் சூடியிருப்பார். **வாழ்க்கையில்** ஜெயிப்பது என்பது இவ்வுலகைச் சார்ந்தது. வாழ்க்கையின் பொருள் இவற்றைத் தழுவுவதில் அல்ல என்பதை மிகத் தெளிவாக உணர்ந்திருந்தார் தந்தை பிரான்சிஸ். தந்தை பிரான்சிஸ் தெரிந்துகொண்ட வழி வாழ்க்கையை ஜெயிக்க உதவியது. ஆம் பிரான்சிஸ் **வாழ்க்கையை** ஜெயிக்க நினைத்தார். அதற்காக சிலுவையைத் தழுவினார், துன்பங்களைத் தழுவினார், தொழுநோயாளர்களைத் தழுவினார், பகைவர்களையும் தழுவினார்…. இதற்கெல்லாம் அவரின் தெளிவான முடிவே காரணம்.

போராட்டங்கள், சோதனைகள் நிறைந்த நம் வாழ்வில் நாம் எடுக்கும் முடிவு தெளிவானதாக இருக்க அன்பர் இயேசுவிடம் உருக்கமாக மன்றாடுவோம்.

**பாடல்: உன் கரத்தோடு என் கரம் சேர்த்து**

இது கற்பனைக் கதை. ஒருமுறை **திருவள்ளுவர்** பள்ளி இலக்கிய மன்றத்திற்கு வரவழைக்கப்பட்டார். அப்போது பள்ளி மாணவன் ஒருவனிடம் ஒரு கேள்வி கேட்டார். தாமரைப்பூவின் உயரம் என்ன? அவன் அடுத்த மாணவனைப் பார்த்தான். மற்றொரு மாணவன் எழுந்து ஐயா உங்கள் கேள்வி தவறு என்றான். எப்படி தவறு என்றபோது தாமரைப் பூவுக்கென்று உயரம் என்ன இருக்கிறது. அதற்கு ஒன்றே ஒன்று தெரியும். அது தண்ணீருக்கு மேலே நிற்கும். தண்ணீர் 5அடி இருந்தால் அதற்கு மேல் நிற்கும். 50அடி இருந்தால் அதற்குமேல் போய்விடும். 500அடி போனால் அதற்குமேல் போய்விடும்.

தண்ணீரின் உயரம் தாமரையின் உயரம் என்று சொல்லி உட்காரப்போன அந்த மாணவனிடம் மீண்டும் கேட்டார். தண்ணீரின் உயரம் தாமரையின் உயரம் என்று தெரிந்து கொண்டாய். வாழ்க்கையில் உன்னுடைய உயரம் என்ன? என்ற போது அவனால் பதில் சொல்ல இயலவில்லை. அவர் இப்படி சொன்னார். ஒன்றைத் தேர்ந்து கொண்டால்தான் அதன் சிகரத்தை அடைய முடியும்.

பிரான்சிஸ் மிகச்சரியானதைக் கண்டுகொண்டார். அதனாலே சிகரம் தொட்டார். தந்தை **பீட்டர் பெர்னார்தோன்** தன்னுடைய சொத்துக்களெல்லாம் தன் மகனாலே வீணடிக்கப்படுகிறதே என்று ஆயரிடம் முறையிட்டபோது யாரும் எதிர்பார்க்கா வண்ணம் உடலில் அணிந்திருந்த ஆடைகளையும் கழற்றிக் கொடுத்து விடுகிறார் பிரான்சிஸ். வானகத் தந்தையே என் தந்தை என்று உரக்கச் சொன்னபோது இவருடைய சிகரம் எவருக்கும் எட்டாத உயரத்தில் இருந்தது. அந்தக் கணமே தனது மேலுடையால் அணைத்த ஆயர் இவரின் உச்சம் கண்டு சிலிர்த்துப் போகிறார். ஆயர்கூட தொட முடியாத சிகரத்தைத் தொட்டவர் பிரான்சிஸ்.

திருவள்ளுவர் இப்படி முடித்தார். ‘‘தண்ணீரின் உயரம் தாமரையின் உயரம். எண்ணத்தின் உயரம் உன்னுடைய உயரம்’’ என்று. பிரான்சிஸின் எண்ணம் மிக உயர்ந்தது. அந்த எண்ண அலைகளைத் தழுவிக் கொண்டவர்கள் எண்ணற்றவர்கள். இன்றைய திருத்தந்தையும் அப்படி தழுவியதால்தானே பிரான்சிஸ் என்ற பெயரை ஏற்றக்கொண்டார்.

மனம்போன போக்கில் வாழ்ந்த பிரான்சிஸ், இயேசுவின் அணுகுமுறையால் ஈர்க்கப்பட்டார். ஏழை பணக்காரர், உயர்ந்தோர் தாழ்ந்தோர், ஓரங்கட்டப்பட்டவர்கள் நசுக்கப்பட்டவர்கள் என்று சமுதாயத்தில் இருந்த பாகுபாடான நிலை தந்தை பிரான்சிஸை புதிய பாதையில் பயணப்படத் தூண்டியது.

தொழுநோயாளியைத் தேடிச்சென்றார். கட்டி அரவணைத்து முத்தமிட்டார். அவர்களையும் தம் சகோதர, சகோதரிகளாகப் பாவித்தார். இத்தகைய அணுகுமுறை அவருடைய பழைய பகட்டு வாழ்விலிருந்து மாற்றம் பெறத் துணைபுரிந்தது. பிரான்சிஸ்குவின் இந்த மாற்றம்தான் அவருடைய ஆன்மீகப் பயணத்தின் தொடக்கமாக அமைந்தது.

**விழிப்போடு வாழ்பவர்கள் சமூகத்திற்கு நன்மைகளைச் செய்கிறார்கள்.**

**நமக்கும் சாத்தியமே: (இறைவனைப் புகழ்வோம்)**

1. அச்சம் சூழும் தருணத்தில் துணிவைத் தந்து காக்கும் தேவனை ...
2. கோபத்தைத் தணித்து பக்குவமாய் செயலாற்ற ஆற்றல் தரும் தேவனை...
3. நான் என்னும் அகந்தையிலிருந்து விடுபடத் துணைபுரியும் தேவனை...
4. தனிமையில் நம் உண்மையான தோழனாய் உடனிருக்கும் தேவனை...
5. மனக்குழப்பங்களை விலக்கி பளிச்சிடும் புதுத்தெளிவு பெறச்செய்யும் தேவனை..
6. சஞ்சலத்தைக் குறைத்து அக அமைதியை அளிக்கும் தேவனை...
7. விரோதத்தைத் துறந்து மனங்கனிந்த நட்போடு வாழவைக்கும் தேவனை...
8. எந்த விஷயத்திலும் எதிர்த்து வழிமறித்து நிற்காமல் பிறரின் நல்ல முடிவுகளை ஏற்க வைக்கும் தேவனை...
9. அன்றாடம் அரைகுறையாக வாழாமல் விழிப்போடு வாழ வைக்கும் தேவனை....

**பாடல்: உம் பணி வாழ்வையே எங்கள் அகலாக ஏற்று (அல்லது) நீயே எந்தன் தெய்வம்**

**விலங்கினங்களிடம் சகோதரத்துவம் :**

குளிர்காலம் பனி கடுமையாகப் பெய்து கொண்டிருந்தது. ஒரு நாய்கூட வீட்டைவிட்டு வெளியே வரவில்லை. ஒரு பறவையும் கண்ணில் படவில்லை. குரலும் கேட்கவில்லை. குருவிகள் கிடைத்த பொந்துகளில் ஒளிந்து கொண்டன.
புறாக்கள் பாதுகாப்பான மூலைகளில் ஒதுங்கி நெருக்கமாக நின்று கொண்டன. பல பறவைகள் குளிரில் விறைத்துச் செத்துப் போய்விட்டன. சில புறாக்கள் ஒரு வீட்டுக் கூரையின் அடியில் ஒதுங்கின.

சில குருவிகள், ''புறாக்களே! உங்கள் உடல் பெரியது. உங்களை அண்டி நிற்க எங்களை அனுமதித்தால் உங்கள் உடற்சூட்டால் நாங்கள் பிழைப்போம். அனுமதிப்பீர்களா?'' என்று கேட்டன. 'நாமே குளிரால் செத்துக் கொண்டிருக்கிறோம். அந்தக் குருவிகளின் உடலெல்லாம் பனி. அவற்றை நம்மிடம் அண்டவிட்டால் நாம் செத்தே போவோம். எனவே நம்மிடம் வர அவற்றை அனுமதிக்க வேண்டாம்' என்று ஒரு புறா கூறியது. சில புறாக்கள் ஆமோதித்தன.

'பாவம் இந்தச் சிறு குருவிகள் நாம் காப்பாற்றாவிட்டால் இவை இறந்து போகும். நான் காப்பாற்றப் போகிறேன்' என்று கூறி ஒரு புறா, ஒரு குருவியை அழைத்தது. அந்தக் குருவி, புறாவின் அருகில் வந்து அதன் சிறகுகளின் அடியில் ஒடுங்கிக் கொண்டது. அதைப் பார்த்து மேலும் சில புறாக்கள் குருவிகளை அழைத்துத் தம்மோடு சேர்த்துக் கொண்டன.
குருவிகளுக்கு அடைக்கலம் கொடுத்த புறாக்களைப் பார்த்து ஒரு புறா, 'நீங்கள் முட்டாள்கள். இந்தக் குருவிகளைக் காப்பாற்றும் முயற்சியில் நீங்கள் செத்துப்போகப் போகிறீர்கள்' என்று எச்சரித்தது. 'இந்த இரவில் எப்படியும் நாம் சாகத்தான்

போகிறோம். உயிரோடிருக்கும்வரை நம் வாழ்க்கையைத் தேவைப்பட்டவர்களோடு பகிர்ந்து கொள்ளலாமே’ என்றது ஒரு புறா. இரவு வளர வளரக் குளிரும் வளர்ந்தது. பனிக்காற்று கடுமையாக வீசியது. விடிந்தது. அந்த வீட்டுச் சிறுமி ஜன்னலைத் திறந்தாள். அப்போது கூரையிலிருந்து ஒரு புறா பொத்தென்று தரையில் விழுந்தது.

அப்பா! ஒரு புறா குளிரில் இறந்துபோய் விழுந்து விட்டது’ என்று அவள் கத்தினாள். அந்தச் சிறுமியின் தந்தை, தரையில் செத்துக்கிடந்த புறாவை எடுத்தான். அவன் கூரையின் அடியில் சில புறாக்கள் இருப்பதைப் பார்த்தான்.

அவன் அவற்றையெல்லாம் எடுத்துக் கொண்டு வீட்டின் கணப்பருகே வைத்தான். சிறிது நேரம் சென்றதும் சில புறாக்கள் சிறகை அசைத்தன. கூவின. அவற்றின் சிறகுகளிலிருந்து குருவிகள் வெளிப்பட்டன. சில புறாக்கள் அசையாமல் கிடந்தன.

சிறுமி அந்தப் புறாக்களின் சிறகுகளை விலக்கிப் பார்த்தாள். அங்கே குருவிகள் இல்லை. தனியாக வாழ்வதற்காக இந்த பூமிக்கு எவரும் வரவில்லை. கடவுளோடு, இயற்கையோடு, சகமனிதனோடு இணைந்து வாழ வேண்டும் என்பதே படைக்கப்பட்டதன் நோக்கம். இதில் ஒன்றை அரவணைக்கத் தவறினாலும் அதன் விளைவு மனிதர்களுக்குத்தான் அதிகமாக இருக்கும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

விலங்கினங்கள் அனைத்தும் கடவுளின் படைப்புகள் என்பதை உணர்ந்த பிரான்சிஸ் அவற்றிடமும் அன்பு, பரிவு, பாசம் கொண்டு அவற்றைச் சகோதர சகோதரிகளாய் கண்டுபாவிக்கும் அளவிற்குத் தன்னை மாற்றிக் கொண்டார். குறிப்பாக ஓநாயிடம் பிரான்சிஸின் அணுகுமுறை எப்படி இருந்தது என்பது நாமெல்லாம் அறிந்ததே. மூர்க்கத்தனமான ஓநாயால் அங்கிருந்த மக்களிடையே பெரிய கிளர்ச்சி ஏற்பட்டது. எத்தகைய குணமுடையதையும் அன்போடும், நம்பிக்கையோடும் அணுகினால் வெற்றி கொள்ளலாம் என்பது ஓநாயிடம் அவர் கொண்டிருந்த அணுகுமுறை. ஓநாயைச் சகோதரனே என அழைத்தார் பிரான்சிஸ். இறை மனிதன் முன்பு ஒரு மூர்க்கத்தனமான ஓநாய் சாந்தமான செம்மறியாக மாறியது. அவரின் அன்புக் கட்டளைக்குப் பணிந்தது. இந்த நிகழ்வு மனிதர்களை மட்டுமல்ல, எல்லா உயிர்களையும் அரவணைத்துச் செல்ல வேண்டும் என்பதை நமக்குக் கற்றுத் தருகிறது.

ஓநாயிடம் காணப்படும் கொடூர தன்மைகள் நம் சிந்தனை, சொல், செயல்பாடுகளிலும் வெளிப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. நம்மிடம் உள்ள மிருகக்குணங்களாகிய **நான்** என்னும் **அகந்தை, கோபம், தன்னலம், போட்டி, பொறாமை, பகை, வெறுப்பு** இவற்றிடமிருந்து விடுதலை பெற்று, நம் உடன்வாழும் சகோதரிகளிடத்தில், குழுமத்தில், பணித்தளங்களில் சகோதரப் பாசத்தில் வளர வேண்டியது நம் கடமையாகிறது. இத்துடன் இயற்கை, விலங்கினங்கள் இவைகளின் மட்டிலும் அன்பு, கரிசனை, இரக்கம் கொண்டு தந்தை பிரான்சிஸின் அணுகுமுறையைப் பின்பற்றி வாழ அழைக்கப்படுகிறோம். மனிதர்களிடத்தும் இறைவனால் படைக்கப்பட்ட உயிரினங்கள் மட்டிலும் நமது அணுகுமுறை எவ்வாறு உள்ளது என்பதைச் சீர்தூக்கிப் பார்ப்போம்.

இந்த 2020ஆம் ஆண்டு மிகப்பெரிய பாடத்தை உணர்த்தியிருக்கிறது. தன்னைத் தனிமைப்படுத்திக்கொண்டு, தன் குடும்பத்தைத் தனிமைப்படுத்திக்கொண்டு, பெற்றோரைத் தனிமைப்படுத்தி அந்த இன்பத்தில் திளைத்த மனிதனுக்கு, தனிமையே மிகப்பெரிய நோயாய் உருவெடுத்து உறவுக்காக ஏங்க வைத்துள்ளது. ஒற்றைக் குடும்பத்தைவிடக் கூட்டுக்குடும்பமே சிறந்தது என்பதைப் புரிய வைத்திருக்கிறது. ஒருவர் ஒருவரைத் தொடமுடியாமல், தழுவ முடியாமல் தவிக்கவிட்டு அதன் உன்னதம் என்ன என்பதை உணர்த்தியிருக்கிறது. தூய்மையான வாழ்வு வாழ்வது சாத்தியமே என்பதை நினைக்க வைத்திருக்கிறது. நான் தான் பெரியவன், பணக்காரன், உயர்ந்த குலத்தில் பிறந்தவன், உயர்பதவி வகிப்பவன், வல்லரசுநாடு என்ற எண்ணங்களையெல்லாம் பிடுங்கி எறிந்திருக்கிறது. இந்த உலகம் தங்களுக்கு சொந்தமானது என்று விலங்குகளும் பறவைகளும் முதல்முறையாக உணர்ந்திருக்கின்றன. இவை நமக்கு உணர்த்தும் பாடம் என்ன என்பதைச் சிந்திப்போம்.

தந்தை பிரான்சிஸ் அசிசியைப்போல முதலில் இறைவனைத் தழுவிக்கொள்ள அழைக்கப்படுகிறோம். இரண்டாவதாக உடன்வாழும் சகோதரியையும் நம்மைச் சுற்றியுள்ள இயற்கையையும் தழுவி வாழ அழைக்கப்படுகிறோம். இவ்வாறு சமமாகப் பாவித்து வாழ ஆரம்பித்தால் இந்த உலகம் நம்மால் வாழும். நாமும் இந்த உலகத்தால் வாழ வைக்கப்படுவோம்.

**பாடல்: என் தெய்வம் வாழும் பூமியிது** …

**சிந்தனைத் துளிகள்…**

- அடுத்தவர் நலனில் அக்கறை கொள்வதே உண்மையான அன்பு. உடன் வாழும் சகோதரிகள் மட்டில் உண்மையான அக்கறை கொண்டு வாழ்கின்றேனா?
- நம்மைக் காயப்படுத்தியவர்களை, துன்புறுத்தியவர்களை மன்னித்து சகோதர வாஞ்சையோடு அவர்களை ஏற்றுக்கொள்கின்றேனா?
- பிறரின் தேவைகளை அறிந்து அவர்களுக்கு உதவிக்கரம் நீட்ட முன்வருகின்றேனா?
- தந்தை பிரான்சிஸ் போன்று எளிய மனதோடும், தாழ்ச்சியோடும் வாழ முயற்சிக்கின்றேனா?
- நமது விருப்பு, வெறுப்பிற்கு மரித்து பிறர்நலத்திற்கும் நேர்மறை எண்ணத்திற்கும் உயிர்க்கின்றேனா?
- இறைவனின் சாயலைப் பிரதிபலிக்கின்ற இயற்கையை நேசித்து அதனைப் பாதுகாத்து வருகின்றேனா?

**பகைவரிடமும் நட்பு பாராட்டிய பிரான்சிஸ்:**

**"வாழ்க்கை என்பது போராட்டம். இதில் வலிமையானவையே வாழும்"** என்றார் டார்வின். ஆனால் சீன ஞானி கன்ஃபூஷியஸோ, **"மென்மையானவையே நீண்டநாள் வாழும்"** என்கிறார்.

நீர் மென்மையானது என்று நினைக்கிறோம். ஆனால் அது வெள்ளமானால் கரைகளை உடைத்து விடுகிறது. வலிமையான அணைகளைத் தகர்த்து விடுகிறது. ஊர்களையே அழித்து விடுகிறது. நெருப்பு வன்மையானது. ஆனால் அந்த நெருப்பை மென்மையான நீர் அணைத்து விடுகிறது. நெருப்பு அழியும். நீர் அழியாது.

காற்று மென்மையானது. ஆனால் அது புயலானால் பெரிய மரங்களைச் சாய்த்து விடுகிறது. புயலில் வலிமையான மரம் விழுந்துவிடுகிறது. மென்மையான நாணல் தப்பித்து விடுகிறது.

பூகம்பத்தில் மனிதன் கட்டும் வலிமையான வீடுகள் உடைந்து போகின்றன. மென்மையான சிலந்தியின் வீடு தப்பித்து விடுகிறது.

வன்மையால் மண்ணை மட்டும்தான் பிடிக்க முடியும். மனங்களைப் பிடிக்க மென்மைதான் உதவும். வன்மையானவர்களுக்கு வரலாற்றில் மட்டும்தான் இடம் கிடைக்கிறது. மென்மையானவர்களுக்கோ அழியாத காவியங்களில் இடம் கிடைக்கிறது. அந்த மென்மையை கையிலெடுத்தவரில் பிரான்சிஸ் சிறப்பிற்குரியவர் என்பதால்தான் இன்றும் அவரைப் பேசிக்கொண்டிருக்கிறோம்.

சிலுவைப்போர் நடைபெற்ற சமயம், மக்கள் பலர் அதற்குப் பலியாகிக் கொண்டிருந்தனர். திருச்சபையில் பாவம் பெருகியதும், பாவங்கள் பணத்திற்காக விற்கப்பட்டதும், திருச்சபையின் சொத்துகள் விற்கப்பட்டதும் இந்தக் காலக்கட்டத்தில்தான். போரை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியில் திருத்தந்தை உட்பட யாரும் ஈடுபடவில்லை. மாறாக போருக்கு பணம் சேகரிப்பதில் முழு ஈடுபாடு காட்டிக் கொண்டிருந்தனர்.

நம் தந்தை பிரான்சிஸ் அவர்களில் ஒருவராக இருக்க இயலவில்லை. எனவே தான் **5ம் சிலுவைப்போர்** நடைபெற்ற சமயத்தில் அவர் **எகிப்திய சுல்தானைச்** சந்தித்தார்.

தமியத்தா என்ற இடத்தில் 30000 இராணுவ வீரர்கள் கூடியிருந்த இடத்தில் எதிரிகளின் எல்லையைக் கடந்து சென்று சுல்தானைச் சந்தித்த நிகழ்வு ஒரு சாதாரண முயற்சி அல்ல. திருச்சபையையே திருப்பிப் பார்க்க வைத்து நெகிழ வைத்த ஒரு நிகழ்வு. அவரின் கடின முயற்சிக்குப் பலன் கிடைத்தது. பிரான்சிஸ்குவின் இந்த சந்திப்புதான் இருபக்கமும் பரஸ்பர உறவு ஏற்படக் காரணமாக அமைந்தது. பல்சமய உரையாடலை 12ம் நூற்றாண்டிலேயே தொடங்கிய முதல் மனிதர் என்ற பெருமையும் நம் புனிதர் பிரான்சிஸையே சாரும்.

பெருந்தன்மையும், மென்மைத்தன்மையும் இயல்பிலேயே தந்தை பிரான்சிஸ் பெற்றிருந்ததால்தான் மிகப்பெரிய போரை அவரால் தடுத்து நிறுத்த முடிந்தது. இவ்வுலகத்தின் கண்களுக்கு மிகக் கடினமானவையாகத் தோன்றியவை கூட பிரான்சிஸிற்குத் தழுவிக்கொள்ள எளிதாக அமைந்தது என்றால்.... எப்படி? அடிப்படைக் காரணம் என்ன? ஆழ்ந்த அமைதியில் சிந்திப்போம்.

125 ஆண்டுகளுக்கு முன் நம் சபை முன்னோரிடம் இலக்கில் தெளிவு இருந்தது. அதனால் தான் மயிலைக்கு அவர்களால் வர முடிந்தது. ஏழைகள், அனாதைகள், கைவிடப்பட்டவர்களுக்காய் தங்களைக் கரைத்துக் கொண்ட நம் முன்னோரைக் குறைத்து மதிப்பிட முடியாது. கூரை கூரையாய் குனிந்து சென்று குறையறிந்தவர்கள். உப்புக்கரித்திருந்த முகங்களில் ஒளிகூட்டியவர்கள்.

இவ்வாறு அண்ணல் அசிசியைப் போல நம் முன்னோரும் ஏழை எளியவர்களுக்காய் தங்கள் வாழ்வையே விலையாக்கி உழைத்தவர்கள். இன்று நம் பணிகளின் உரு மாறினாலும் தடம் மாறாமல் தொடர்ந்து கொண்டிருப்பதால் தான் பிரான்சிஸ்கன் என்று நம்மால் பெருமையோடு சொல்ல முடிகிறது. அடைக்கலம் தேடுகின்ற தேவைப்படுகின்ற அனைவருக்கும் அடைக்கலமும் ஆதரவுமாக இருப்பதையே தனிவரமாக நம் சபை பெற்றிருப்பது மிகவும் பொருத்தமானது என்று சிந்தித்துப்பார்க்கும் இவ்வேளையில் நம் சபையின் நலனுக்காக உழைத்து மரித்த நம் சகோதரிகள் அனைவரும் நித்திய சாந்தியை அடைய அருள் வேண்டி சில நொடிகள் அமைதியில் செபித்து மரணத்தை அங்கீகரிக்கும் செபத்தில் இணைவோம்.

***Prepared by***

SR. JOSEPH CELINE (658) and SR. ARUL JEYA KALA RANI (1131)